## இராமநாதபுரம் நகராட்சி

இராமநாதபுரம் நகராட்சியில் 2019 மே மாதத்திற்கான நகர் மன்ற சாதாரண கூட்டம் 31.05.2019 ந் தேதி காலை 11.15 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், இராமநாதபுரம் நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்:—

**பொருள் 1**

இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் மே 2019—க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**— மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.867**— பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது

**பொருள் 2**

இராமநாதபுரம் நகராட்சி பொறியாளர் மே 2019—க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**— மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.868**— பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது

**பொருள் 3**

இராமநாதபுரம் நகராட்சி, வளர்ச்சி திட்டம் மற்றும் சாதனைகள் குறித்து பொங்கல் மலர் 2019—ல் விளம்பரம் வெளியிட்டதற்கு *தமிழ்சுடர் நாளிதழ், மதுரை அவர்களுக்கு பட்டியல் தொகை ரூ.4,200/— வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**—1)மன்றம் அனுமதிக்கலாம்.

2) நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று பட்டியல் தொகை ரூ.4,200/— வழங்குவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்.3877/2017/இ1

**தீர்மானம் எண்.869**— அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 4**

இராமநாதபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் டம்பர் பிளேசர் – I வாகனம் TN65-H-4759க்கு, ஹைட்ராலிக் பம்பு சர்வீஸ், ஹைட்ராலிக் ஆயில், ஆகிய பணிகள்

மேற்கொள்வதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1) | N.S.ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், இராமநாதபுரம். | ரூ.24,780/– |
| 2) | A.R.இன்ஜீனியரிங் ஒர்க்ஸ் இராமநாதபுரம். | ரூ.29,736/– |
| 3) | ஸ்ரீவிக்னேஷ் இன்ஜீனியரிங் ஒர்க்ஸ், இராமநாதபுரம். | ரூ.28,674/– |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்ட *N.S.ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், அவர்கள் கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக இருப்பதால், இவ்விலைப்புள்ளியை எற்று, மன்றத்தின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கலாம்.

**<u>அலுவலக குறிப்பு</u>**– மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.870–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் 5</u>**

இராமநாதபுரம் நகராட்சி, வார்டு–எப், பிளாக்–4, நகர புல எண்.19/1, புதிய பேருந்து நிலையம் எதிரே உள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்திற்கு திருமதி.நபிஷாபீவி என்பவரால் இராமநாதபுரம் சார்பு நீதி மன்றத்தில் ஓ.எஸ்.எண்.25/2013ல் தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கிற்கு இந்நகராட்சி சார்பாக திரு.என்.சரவணபாபு என்பவர் நகர்மன்ற வழக்கறிஞர் ஆஜராகுவதற்கு உரிய வழக்கு கட்டணம் ரூ.5,000/– வழங்குவதற்கு மன்ற பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**– மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.3654/2005/எப்1

**<u>தீர்மானம் எண்.871–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் 6</u>**

இராமநாதபுரம் நகராட்சி, வார்டு–சி, பிளாக்–9, நகர புல எண்.236 உள்ள இடமானது பொதுப்பாதை என ஆட்சேபனை செய்து திரு.நாகபாஸ்கர் என்பவர் இராமநாதபுரம்

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் வழக்கு எண்.46/2014, IA.NO.137–ல் தொடரப்பட்ட வழக்கிற்கு இந்நகராட்சி சார்பாக நகர்மன்ற வழக்கறிஞர் திரு.என்.சரவணபாபு என்பவர் உரிய வழக்கு கட்டணம் ரூ.5,000/– வழங்க மன்றப் பொருள் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1180/2017/எப்1

**தீர்மானம் எண்.872–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 7**

இராமநாதபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் குப்பை அகற்றும் வாகனம் TN65-A-5309க்கு, தகுதிச்சான்று முடிவடைந்து பழுதுப்பணிகள் மேற்கொள்வதற்கு 18.03.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் நடைபெற்றது. மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1) | N.S.ஆட்டோ எலக்ட்ரிக்கல், ஒர்க்ஸ், இராமநாதபுரம். | ரூ.56,566/– |
| 2) | ஸ்ரீவிக்னேஷ் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், இராமநாதபுரம். | ரூ.62,204/– |
| 3) | A.R.இன்ஜினியரிங் ஒர்க்ஸ், இராமநாதபுரம். | ரூ.64,641/– |

மேற்படி வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்ட *N.S.ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், இராமநாதபுரம் அவர்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால், இவ்வொந்தப்புள்ளியை ஏற்கலாம். அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் அனுமதியோடு பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு–** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.873–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 8**

இராமநாதபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் குப்பை அகற்றும் டிராக்டர் TN65-C-9697க்கு, தகுதிச்சான்று பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி 20.03.2019 அன்று நடைபெற்றதில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1) | N.S.ஆட்டோ எலக்ட்ரிக்கல், | ரூ.1,50,872/– |

| | | |
|---|---|---|
| | ஒர்க்ஸ், இராமநாதபுரம். | |
| 2) | ஸ்ரீவிக்னேஷ் இன்ஜீனியரிங் ஒர்க்ஸ், இராமநாதபுரம். | ரூ.1,57,453/– |
| 3) | A.R.இன்ஜீனியரிங் ஒர்க்ஸ், இராமநாதபுரம். | ரூ.1,58,410/– |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்ட *N.S.ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், இராமநாதபுரம் அவர்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால், இவ்வொந்தப்புள்ளியை ஏற்கலாம். அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் அனுமதியோடு பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

<u>அலுவலக குறிப்பு</u>– மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.5385/2019/H1

**<u>தீர்மானம் எண்.874–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் 9</u>**

இராமநாதபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் குப்பை அகற்றும் டிராக்டர் TN65-A-3904க்கு தகுதிச்சான்று பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி 20.03.2019 அன்று நடைபெற்றதில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1) | N.S.ஆட்டோ எலக்ட்ரிக்கல், ஒர்க்ஸ், இராமநாதபுரம். | ரூ.1,47,963/– |
| 2) | ஸ்ரீவிக்னேஷ் இன்ஜீனியரிங் ஒர்க்ஸ், இராமநாதபுரம். | ரூ.1,63,123/– |
| 3) | A.R.இன்ஜீனியரிங் ஒர்க்ஸ், இராமநாதபுரம். | ரூ.1,70,586/– |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்ட *N.S.ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், இராமநாதபுரம் அவர்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால், இவ்வொந்தப்புள்ளியை ஏற்கலாம். அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் அனுமதியோடு பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

<u>அலுவலக குறிப்பு</u>– மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.628/2019/எச்1

**<u>தீர்மானம் எண்.875–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் 10</u>**

இராமநாதபுரம் நகராட்சியின் 2017–2018ம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் மூலதன நிதி தணிக்கை அறிக்கையில், நகராட்சியிலிருந்து 2017–2018ம் ஆண்டிற்கு செலுத்தப்பட வேண்டிய தணிக்கைக் கட்டணம் ரூ.56,942/– எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் தொகையினை உரிய அரசுத் தலைப்பில் செலுத்துவதற்கு மன்றப் பொருள் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3185/2017/அ4

**தீர்மானம் எண்.876–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 11**

இராமநாதபுரம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் பிறப்பு, இறப்பு, பதிவேடுகள் வைத்து பராமரிக்கத் தேவையான ஸ்டீல் பீரோ(அலமாரி) 3 எண்ணம் விநியோகம் செய்த வகையில் தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15–ன் கீழ் தொகை ரூ.34,500/-க்கு பட்டியல் வரப்பெற்று தொகை வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.782/2019/எச்1

**தீர்மானம் எண்.877–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 12**

இராமநாதபுரம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு தேவையான தளவாடச் சாமான்கள் 2019–2020–ம் ஆண்டிற்கு விநியோகம் செய்யப்பட்ட வகையில் தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15ன் கீழ் தொகை வழங்கப்பட்டுள்ளது.உத்தேச செலவினம் ரூ.2,11,000/–க்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது..

**அலுவலக குறிப்பு–** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1257/2019/எச்1

**தீர்மானம் எண்.878–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 13**

இராமநாதபுரம் நகராட்சியில் உள்ள அனைத்து பிரிவுகளில் இயங்கி வரும் கணிணி பிரிண்டர்களுக்கு பிரிண்டர் டோனர்கள் இருப்பில் இல்லாத காரணத்தினால் தற்போது புதிய பிரிண்டர் டோனர்கள் கொள்முதல் செய்தவற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.55,000/– த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோருவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்.1398/2019/E1

**<u>தீர்மானம் எண்.879–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் 14</u>**

இராமநாதபுரம் நகராட்சியில் தற்பொழுது 25 கணிணிகள் (Client Machines) இயங்கிக் கொண்டு வருகிறது. மேற்படி கணிணிகளுக்கு Antivirus Software காலாவதியாகி விட்டதால் புதிய Original Antivirus Software வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/–த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோருவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்.1397/2019/E1

**<u>தீர்மானம் எண்.880–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 15**

இராமநாதபுரம் நகராட்சி, வார்டு எண்–6, பாத்திமா நகரில் துாய்மை இந்தியா திட்டம் 2018–2019ன் கீழ் நுண்ணுரம் செயலாக்கம் மையம் (Micro Compost Centre) MCC கட்டும் பணியினை தடுத்து நிறுத்துவதற்கு திரு.வி.அப்துல் ரசாக், த/பெ.வருசை முகம்மது PVM Trust No.1/957, அவ்வை தெரு, பாரதி நகர், இராமநாதபுரம் என்பவரால் நகராட்சி மீது தொடரப்பட்ட வழக்கு எண்.WP(MD) No.24455/2018–ன்படி வழக்கினை நடத்துவதற்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.15,000/–ஐ நகராட்சி வழக்கறிஞர் திரு.ஏ.கண்ணன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**–மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.5408/2018/இ1

**<u>தீர்மானம் எண்.881–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 16**

இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை இணைப்பு மண்டபம் ஊராட்சி ஒன்றியம், பட்டிணங்காத்தான் ஊராட்சி, மருதுபாண்டியர் நகரில் கழிவுநீர் குழாய் வாய்க்கால் 121 வீடுகளுக்கு இணைத்தது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண். WP(MD) No.18366 of 2015ன்படி திரு.ஆர்.காசிசங்கர் 33–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர், இராமநாதபுரம் என்பவர் நகராட்சி மீது தொடர்ந்த வழக்கிற்கு இந்நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.ஏ.கண்ணன் என்பவர் ஆஜராகியுள்ளதற்கு வழக்கு கட்டணம் ரூ.15,000/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**–மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3031/2015/இ1

**தீர்மானம் எண்.882–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 17**

இராமநாதபுரம் நகராட்சி, பொது சுகாதார பிரிவின் கீழ் பணிபுரியும் (DBC) டெங்கு பணியாளர்களுக்கு வழங்கும் ஊதியம் ஒரு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.200/– வீதம் ஒரு வருடத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.41,05,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**–மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.883–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 18**

இராமநாதபுரம்ட நகராட்சியில் உள்ள அலவலக கணிணிகளுக்கு Antivirus Software காலாவதியாகிவிட்டதற்கு புதிய Antivirus Software விநியோகம் செய்யும் பணிக்கு 29.04.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக மூன்று விலைப்புள்ளிதாரர்கள் வரப்பெற்றன.

| S.No | Description | Qty | வரப்பெற்ற விலைப்புள்ளிதாரர்களின் பெயர்கள் வழங்கியுள்ள விலைவிகிதம் கூடுதல்/குறைவு ரூ. | | |
|---|---|---|---|---|---|
| | | | M/s Sivajothi , Computer Centre, No.171, Vandikara Street, Salma centre, Ramanathapuram | M/s.Sundar Computers, No.773, Valividu Murugan Kovil Road, Ramanathapuram | M/s.Kingston Computers, No.102-c, Anna Nagar, Railway Feeder Road, Ramanathapuram. |
| 1 | Quick Heal Total Security Antivirus and Installation | 1 | 2,000 | 2,300 | 2,500 |

| | Charges | | | | |
|---|---|---|---|---|---|

மேற்கண்ட வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிதாரர்களில் குறைந்த விலைப்புள்ளி விலைவிகிதம் வழங்கியுள்ள விலைப்புள்ளிதாரர்கள் " M/s.SIVAJOTHI COMPUTER CENTRE" RAMANATHAPURAM அவர்களது குறைந்த விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு –1)மன்றம் அனுமதிக்கலாம்

**2)**அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களது முன் ஒப்புதல் பெற்று விநியோகம் செய்வதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்.1397/2019/இ1

**<u>தீர்மானம் எண்.884–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 19**

இராமநாதபுரம் நகராட்சியில் உள்ள அலுவலக பயன்பாட்டில் உள்ள பிரிண்டர்களுக்கு புதிய டோனர்கள் விநியோகம் செய்யும் பணிக்கு **29.04.2019** அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக மூன்று விலைப்புள்ளிதாரர்கள் வரப்பெற்றன.

| S.No | Description | Qty | வரப்பெற்ற விலைப்புள்ளிதாரர்களின் பெயர்கள் வழங்கியுள்ள விலைவிகிதம் கூடுதல்/குறைவு ரூ. | | |
|---|---|---|---|---|---|
| | | | M/s Sivajothi , Computer Centre, No.171, Vandikara Street, Salma centre, Ramanathapuram | M/s.Sundar Computers, No.773, Validu Murugan Kovil Road, Ramanathapuram | M/s.Kingston Computers, No.102-c, Anna Nagar, Railway Feeder Road, Ramanathapuram. |
| 1 | HP 88A Toner Cartridges | 2 | 7,200 | 7,300 | 7,600 |
| 2 | Samsung 205s Toner Cartidge | 4 | 20,200 | 20,300 | 21,000 |
| 3 | Canon 324 Toner Cartidge | 2 | 16,200 | 16,300 | 18,500 |
| 4 | Richo MP 2501 S | 1 | 3,000 | 3,300 | 3,500 |

மேற்கண்ட வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிதாரர்களில் குறைந்த விலைப்புள்ளி விலைவிகிதம் வழங்கியுள்ள விலைப்புள்ளிதாரர்கள் " M/s.SIVAJOTHI COMPUTER

CENTRE” RAMANATHAPURAM அவர்களது குறைந்த விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு –1)மன்றம் அனுமதிக்கலாம்

2)அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களது முன் ஒப்புதல் பெற்று விநியோகம் செய்வதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்.1398/2019/இ1

**<u>தீர்மானம் எண்.885–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 20**

இராமநாதபுரம் நகராட்சி, பொது சுகாதாரப்பிரிவில் இயங்கும் (Compactor) குப்பை அகற்றும் லாரி TN65–AD-1899–க்கு தகுதிச்சான்று முடிவடைந்ததால் மீண்டும் புதுப்பித்து பழுதுப்பணிகள் மேற்க்கொள்ள உத்தேச செலவினம் ரூ.1,40,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**–மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.761/2019/எச்1)

**<u>தீர்மானம் எண்.886–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் 21</u>**

இராமநாதபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் வாகனம் (Compactor) குப்பை அகற்றும் லாரி TN65- AD-1899–க்கு தகுதிச்சான்று முடிவடைந்ததால் மீண்டும் புதுப்பித்து பழுதுப்பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1) | N.S.ஆட்டோ எலக்ட்ரிக்கல், ஒர்க்ஸ், இராமநாதபுரம். | ரூ.1,38,227/– |
| 2) | ஸ்ரீவிக்னேஷ் இன்ஜீனியரிங் ஒர்க்ஸ், இராமநாதபுரம். | ரூ.1,46,461/– |
| 3) | A.R.இன்ஜீனியரிங் ஒர்க்ஸ், இராமநாதபுரம். | ரூ.1,52,716/– |

மேற்படி வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்ட *N.S.ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், இராமநாதபுரம் அவர்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி

குறைவாக இருப்பதால், இவ்வொந்தப்புள்ளியை ஏற்கலாம். அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் அனுமதியோடு பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு–** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.887–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 22**

இராமநாதபுரம் நகராட்சி தூய்மை இந்தியா இயக்க திட்டம் 2018–2019ன் கீழ் முதல் நிலை திடக்கழிவு சேகரப் பணிக்காக பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் (BOV) 25–எண்ணம், மற்றும் சிறிய இலகுரக வாகனம் (LCV) 3–எண்ணம் விநியோகம் செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் வெளியிட்டதற்கும், மற்றும் குடிநீர் நிதி திட்டம் 2018–2019ன் கீழ் Providing Internal Plumping Works for Water Supply HSC'S 3500 – எண்ணம் இணைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் வெளியிட்ட வகையிலும் கீழ்க்கண்டவாறாக மன்ற விளம்பரதாரர்களுக்கு தனித்தனியே பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| விளம்பரதாரர்களின் பெயர்கள் | பில் நம்பர் மற்றும் நாள் | பில் தொகை ரூ. |
|---|---|---|
| 1)Deccan Chronicle,Tamilnadu | 33AAALR1101P126, Date.02/02/2019 | 34.650/– |
| 2)Makkal kural,TamilNadu | 33AAALR1101P126, Date.02/02/2019 | 33,750/– |
| | CGST 2.50% | 1,710/– |
| | SGST 2.50% | 1,710/– |
| | Total | 71,820/– |
| 3)Business Standard-Tamilnadu | AAA/1175/18-19, Date.03.02.2019 | 1,350/– |
| 4)Namadhu Puratchi Thalavi Amma ,TamilNadu | AAA/1175/18-19, Date.03.02.2019 | 18,000/– |
| | CGST 2.50% | 483.75 |
| | SGST 2.50% | 483.75 |
| | Total | 20,318/– |
| 5)Deccan Chronicle,Tamilnadu | AAA/1276/18-19, Date.25.02.2019 | 34,650/– |
| 6)Dina Cheithi,TamilNadu | AAA/1276/18-19, Date.25.02.2019 | 22,250/– |
| | CGST 2.50% | 1,422.50/– |
| | SGST 2.50% | 1,422.50/– |
| | Total | 59,745/– |
| 7) Deccan Chronicle,Tamilnadu | AAA/1313/18-19, Date.14.03.2019 | 33,264/– |
| 8)Malai Murasu, Tamilnadu | AAA/1313/18-19, Date.14.03.2019 | 19,200/– |

| | | |
|---|---|---|
| | CGST 2.50% | 1311.60/- |
| | SGST 2.50% | 1311.60/- |
| | Total | 55,087/- |

**அலுவலக குறிப்பு**- 1)மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட தொகையான ரூ.2,06,970/-ஐ Accord Advertisement Agencies,Chennai – 600 034 அவர்களுக்கு தனித்தனியே வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.3877/2014/இ1

**தீர்மானம் எண்.888-** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 23**

இராமநாதபுரம் நகராட்சி , பாதாள சாக்கடை திட்டம், கழிவுநீர் அகற்றும் நிலையம் கழுகூரணி கிராமத்தில் இயங்கி வரும் நிலையத்திற்கு Analysis of Sample Test – கட்டணம் மாதம் ரூ.1,310/- வீதம் 2019-2020ஆம் ஆண்டிற்கான (ஏப்ரல் -2019 முதல் மார்ச் 2020) வரையிலான 12 மாதத்திற்குரிய கட்டணம் ரூ.15,720/- செலுத்தப்பட வேண்டும். எனவே மேற்படி கட்டணத்திற்குரிய உத்தேச செலவினம் ரூ.16,000/-த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**- 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று மாதாந்திர பட்டியல் தொகை வழங்குவதற்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்.8946/2000/E1

**தீர்மானம் எண்.889-** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 24**

இராமநாதபுரம் நகராட்சி , பொறியியல் பிரிவில் இயங்கி வரும் JCB வாகனம் எண்.TN65-K-4682க்கு ஓட்டுநர் பணியிடம் இல்லாததால் தனியார் ஒப்பந்தம் மூலம் கனரக ஓட்டுநர் உரிமம் பெற்ற பணியாளர் பணியமர்த்தப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. இதற்கு ஒட்டுநர் ஊதியம் ரூ.493/- வீதம், இந்நகர் மன்ற தீர்மான எண்.716, நாள்.08.10.2018-ன்படி ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்களின் செயல்முறை கடிதம் எண்.K.Dis/அ3/614/2018, நாள்.27.11.2018-ன் தேதியின்படி அனுமதிக்கப்பட்டுள்ள ஊதியம் நாளொன்றுக்கு ரூ.521/- வீதம் ஊதியம் வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி ரூ.521/-

வீதம் 2019–20ஆம் ஆண்டிற்கு(ஓராண்டு காலம்) ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,90,000/–த்திற்கு வருவாய் நிதி மூலம் மேற்கொள்ளும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) தற்காலிக ஒட்டுநர்க்குரிய உத்தேச செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

3) நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று ஏற்கனவே குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ள திரு.கே.சத்தியநாதன், ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்த மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4701/2015/E1

**தீர்மானம் எண்.890–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 25**

இராமநாதபுரம் நகராட்சி, வார்டு–ஜி, பிளாக்–6 நகரளவு எண்.106/1–ல், பொது இடம் என நகராட்சி நகரளவை ஆவணங்களில் உள்ளதால் மேற்படி இடத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ள திரு.பாலு என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.WP(MD)24781/2018 தொடரப்பட்ட வழக்கிற்கு இந்நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.ஏ.கண்ணன் என்பவருக்கு வழக்கறிஞர் வழக்கு கட்டணம் ரூ.15,000/–ம் வழங்குவதற்கு மன்றப் பொருள் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு.எண்.4701/2018/எப்1

**தீர்மானம் எண்.891–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 26**

இராமநாதபுரம் நகராட்சி, பொது சுகாதார பிரிவில் இயங்கும் குப்பை அகற்றும் வாகனம் TN65–9249 வாகனத்திற்கு ஹைட்ராலிக் பம்ப், டையர் ஆகியவை பழுதுநீக்கம் செய்தவற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.52,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1436/2019/H1

**தீர்மானம் எண்.892–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 27**

இராமநாதபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் குப்பை அகற்றும் வாகனம் TN65-9249 வாகனத்திற்கு பழுது நீக்கம் செய்வதற்கு விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில்

27.05.2019 அன்று மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1) | N.S.ஆட்டோ எலக்ட்ரிக்கல், ஒர்க்ஸ், இராமநாதபுரம். | ரூ.51,965/– |
| 2) | ஸ்ரீவிக்னேஷ் இன்ஜீனியரிங் ஒர்க்ஸ், இராமநாதபுரம். | ரூ.55,552/– |
| 3) | A.R.இன்ஜீனியரிங் ஒர்க்ஸ், இராமநாதபுரம். | ரூ.56,517/– |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்ட *N.S.ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், இராமநாதபுரம் அவர்கள் கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக இருப்பதால், இவ்விலைப்புள்ளியை ஏற்று, மன்றத்தின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு**– மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1436/2019/எச்1

**தீர்மானம் எண்.893–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 28**

இராமநாதபுரம் நகராட்சி, வளர்ச்சி திட்டம் மற்றும் சாதனைகள் குறித்து புரட்சிதலைவி அம்மா பிறந்த நாள் மலர் 2019ல் விளம்பரம் வெளியிட்டதற்கு கீழ்க்கண்டவாறாக பட்டியல் தொகை வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்க வேண்டப்படுகிறது.

| வ.எண் | விளம்பரதாரர்களின் பெயர்கள் | பில்நம்பர் மற்றும் தேதி | பட்டியல் தொகை |
|---|---|---|---|
| 1) | தினதந்தி நாளிதழ், மதுரை. | MDU18–19/0030439, நாள்.24.02.2019 | 41,580/– |
| 2) | டாக்டர், புரட்சி தலைவி, நாளிதழ், சென்னை. | 3659, நாள்.01.03.2019 | 15,000/– |

**அலுவலக குறிப்பு**– மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3877/2014/இ1

**தீர்மானம் எண்.894–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 29**

இராமநாதபுரம் நகராட்சி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் சடலம் மிதந்தது தெடர்பாக வழக்கறிஞர் திரு.ஜி.திருமுருகன் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில்

பொது நல வழக்கு இராமநாதபுரம் நகராட்சி மீது தொடரப்பட்ட வகையில் வழக்கினை எடுத்து நடத்துவதற்கு வழக்குக் கட்டணம் ரூ.15,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.229/2019/எச்1

**தீர்மானம் எண்.895–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 30**

இராமநாதபுரம் நகராட்சி, அவசர அவசியம் கருதி சென்னை மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920, நகராட்சி சட்ட விதி 15–ன் கீழ் 09.03.2019 முதல் 31.05.2019 வரையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்ட வகையில் கீழ்க்கண்டவாறாக செலவினம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1)இராமநாதபுரம் நகராட்சி, பராமரிப்பில் உள்ள புதிய பேருந்து நிலைய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலிருந்து புளிக்காரத் தெரு பகுதிக்கு செல்லக்கூடிய *5 Slive Valve பழுதடைந்துள்ளதற்கு புதிதாக மாற்றி அமைத்து கொடுக்கும் பணிமுடிவுற்றதற்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | 4,500/– |
| 2)இராமநாதபுரம் நகராட்சி, லேத்தம்ஸ் பங்களா சாலையில் அமைந்துள்ள 10.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியில் Presuied மோட்டார் பயன்படுத்தி சுத்தப்படுத்துதல் பணி முடிவுற்றதற்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | 18,000/– |
| 3)இராமநாதபுரம் நகராட்சி பராளுமன்ற பொது தேர்தல் –2019, வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விளம்பர பலகைகள் மற்றும் பிரிண்டர் Frame Work செய்து குறிப்பிட்ட இடங்களில் நிறுவியதற்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | 1,51,000/– |
| 4)இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம், மனித ஆய்வுக் குழியில் கழிவு மண் மற்றும் கழிவு பொருட்கள் அகற்றும் பணி முடிவுற்று பட்டியல் தொகை வழங்கிய முறையே | 50,000/– |
| 5)இராமநாதபுரம் நகராட்சி, பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான தளவாடச் சாமான்கள் 2019–2020ஆம் ஆண்டிற்கு விநியோகம் செய்யப்பட்டதற்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | 2,06,780/– |
| 6)இராமநாதபுரம் நகராட்சி, பொது சுகாதாரப் பிரிவில் தேவையான பீரோ (அலமாரிகள்) 3 எண்ணம் விநியோகம் செய்யப்பட்டதற்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | 33,810/– |
| 7)இராமநாதபுரம் நகராட்சி, பராமரிப்பில் உள்ள அறிஞர் அண்ணா நடுநிலைப்பள்ளியில் சுத்திகரிப்பு குடிநீர் வழங்கும் இயந்திரம் (RO Plant) பழுதாகியுள்ளதற்கு பழுது நீக்கம் அகற்றி இயக்கி கொடுக்கப்பட்டதற்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | 9500/– |
| 8)இராமநாதபுரம் நகராட்சி, பொது தேர்தல் –2019 பாராளுமன்ற தேர்தல், சுவார்ட்ஸ் மேல்நிலைப்பள்ளி வாக்குசாவடி மையங்கள் 129 AV, 126 AV, 130 AV,மற்றும் 131 AV மாதிரி வாக்கு சாவடி மையங்களாக தேர்வு செய்யப்பட்டு உட்புறம் டெக்கரேசன் செய்து ப்ளோர்மேட் விரித்து, அலங்கார வளைவுகள் ஏற்படுத்தி டேபிள் சேர்ஸ், ஏர் சால்ஸ் அமைத்து கொடுத்தமைக்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே. | 74,370/– |
| 9)இராமநாதபுரம் நகராட்சி, கணிணி பிரிவில் உள்ள Broad Band Modem பழுதாகியுள்ளதற்கு புதிய Broad Band Modem விநியோகம் செய்தமைக்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | 2,400/– |

| | |
|---|---|
| 10)இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் விநியோகம் நொச்சிவயல் ஊரணி 5.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட OHT மேல்நிலை தொட்டியில் உள்ள வால்வு மற்றும் ரால்டு பழுதாகியுள்ளதற்கு பழுதுநீக்கம் அகற்றி இயக்கி கொடுத்தமைக்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | 4,000/– |
| 11)இராமநாதபுரம் நகராட்சி, பாராளுமன்ற பொது தேர்தல் –2019, சுவார்ட்ஸ் மேல்நிலைப்பள்ளியில் மாதிரி வாக்கு சாவடி மையத்திற்கான நடமாடும் கழிப்பறை (Mobile Toilet) அமர்த்தி கொடுத்தமைக்கு பட்டியல் தொகை வழங்கிய முறையே | 34,720/– |

**<u>அலுவலக குறிப்பு</u>**– தமிழ்நாடு மாநில நகராட்சி சட்டம் 1920–விதி 15–ன் கீழ் மேற்கண்டவாறு மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.896–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் 31</u>**

இராமநாதபுரம் நகராட்சி, தெரு விளக்கு பராமரிப்பு பணி தனியார் மயமாக்கப்பட்டு 31.05.2019 அன்றுவுடன் பராமரிப்பு ஒப்பந்தம் நிறைவடைந்து உள்ளது. தற்போது நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு நகராட்சி பணியாளர்களை கொண்டு பணி செய்வதற்கு முதற் கட்டமாக உபகரணங்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,25,000/–த்திற்கு வருவாய் நிதியின் மூலம் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1787/2019/இ1

**<u>தீர்மானம் எண்.897–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 32**

இராமநாதபுரம் நகராட்சி, பொது நிதி 2019–20, நகராட்சி அலுவலக வளாகத்தில், பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ளதால் அதனை பயன்படுத்த முடியாத நிலையில் சேதமடைந்து உள்ளது. எனவே அக்கட்டிடத்தினை இடித்து விட்டு புதிய கட்டிடம் கட்டுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.18.50/– லட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1811/2019/இ1

**<u>தீர்மானம் எண்.898–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 33**

இராமநாதபுரம் நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து ஒய்வு பெற்ற திரு.எம்.மூக்கன் என்பவர் நீதிமன்றத்தில் தனது தரப்பில் ஊதிய நிர்ணயம் பாக்கித்தொகை வழங்க கோரி நகராட்சி மீது வழக்கு தொடர்ந்துள்ளார். அன்னாரின் எக்ஸ்பார்ட்டி உத்திரவை ஆட்சேபித்து

மேல் முறையீடு செய்து, எக்ஸ்பார்ட்டி உத்திரவை ரத்து செய்ய, மதுரை தொழிலாளர் நீதிமன்றத்தில் காலதாமத மன்னிப்பு மனு, எக்ஸ்பார்ட்டி ரத்து செய்யக் கோரி மனு, ஆகியவற்றை தாக்கல் செய்ய வழக்கு செலவு உத்தேச மதிப்பீடு ரூ.15,000/-ம் அரசு வழக்கறிஞர் திரு.ஏ.கண்ணன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.899–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 34**

இராமநாதபுரம் நகராட்சி, வருவாய்நிதி **2018–19** புதிய பேருந்து நிலையத்தில் சிறப்பு மராமத்து செய்யும் பணிக்கு **08.03.2019** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்ததாரர்கள் வரப்பெற்றன.

| வ.எண். | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் (ரூ) | விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.சரவணன்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம். | 1,00,000/– | 0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.கே.சத்தியநாதன்<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம். | 1,00,000/– | 1.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களில் குறைந்த ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சரவணன், இராமநாதபுரம் அவர்களது 0.10% சதவீதம் மதிப்பீட்டை விடகுறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 420/2019/இ1

**தீர்மானம் எண்.900–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 35**

இராமநாதபுரம் நகராட்சி, மீது (லேட்) தொட்டியம்மாள் என்பவரின் இறப்புச் சான்றிதழ் உண்மைத்தன்மை மற்றும் நாள் தவறுதலாக இருப்பதாக மதுரை கிளை மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.WP(MD)No.1270/2019(PIL) வழக்கு தொடர்ந்தது தொடர்பாக வழக்குக் கட்டணம் ரூ.7,500/–ம் வழக்கறிஞருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1085/2019/எச்1

**<u>தீர்மானம் எண்.901–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 36**

அரசாணை (நிலையானது) எண்.51 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.06.03.2019–ன் அடிப்படையில் இராமநாதபுரம் முதல் நிலை நகராட்சியை சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டபடியால் அளவு கோலின் படி நகரமைப்பு அலுவலர் நிலை–II, பணியிடம் ஒன்றும், முதுநிலை நகரமைப்பு அலுவலர் பணியிடம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதன் பேரில் மேற்படி பணியிடங்கள் புதியதாக தோற்றுவிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.902–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 37**

அரசாணை (நிலையானது) எண்.51 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.06.03.2019ன் அடிப்படையில் இராமநாதபுரம் நகராட்சி முதல் நிலை நகராட்சியில் இருந்து சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் இந்நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டபடியால் அளவு கோலின் படி வருவாய் அலுவலர் வகுப்பு–Iஏல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதன் பேரில் வருவாய் அலுவலர் வகுப்பு 1ஏல் பணியிடம் ஒன்று புதியதாக தோற்றுவிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.903–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 38**

அரசாணை (நிலையானது) எண்.51 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.06.03.2019ன் அடிப்படையில் இராமநாதபுரம் நகராட்சி முதல் நிலை நகராட்சியில் இருந்து சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. அதன் அடிப்படையில் இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் பணிகள், குடிநீர் திட்டப்பணிகள் நடை

பெற்று வருவதால் கீழ்க்கண்ட பணியிடங்கள் புதியதாக தோற்றுவிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. இளநிலை பொறியாளர் –1
2. பணி மேற்பார்வையாளர் –1
3. வரைபட வரைவாளர் –1
4. பணி ஆய்வர் –1
5. மேல்நிலை நீர்தேக்க தொட்டி காவலர் –4

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.904–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் 39</u>**

இராமநாதபுரம் நகராட்சி, பொறியியல் பிரிவு, பொட்டி தட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் தற்காலிக காவலர் ஒப்பந்ததாரர் மூலம் தினக்கூலி அடிப்படையில் பணியாளர் பணி அமர்த்தப்பட்டு வருகிறது. இதற்குரிய (Casual Laour) ஊதியம் ரூ.334/– வீதம், இந்நகர் மன்ற தீர்மான எண்–715, நாள்.08.10.2018–ன் படி ஊதியம் வழங்கப்பட்டு உள்ளது. மேலும் மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்களின் செயல்முறை கடிதம் எண்.K.Dis/A3/614/2018, நாள்.27.11.2018–ன் தேதியின்படி அனுமதிக்கப்பட்டுள்ள ஊதியம் நாளொன்றுக்கு ரூ.353/– வீதம் ஊதியம் வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி ரூ.353/– வீதம் 2019–20ஆம் ஆண்டிற்கு (ஓராண்டு காலம்) ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,30,000/–த்திற்கு குடிநீர் நிதி மூலம் மேற்கொள்ளும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – 1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)தற்காலிக காவலருக்குரிய உத்தேச செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

3)நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று ஏற்கனவே குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ள திரு.கே.சத்தியநாதன் ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்த மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.2758/2016/இ1

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.905–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 40**

இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் விநியோகத்தில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி 8–எண்ணம் உள்ளது. இவற்றில் 13 எண்ணம் 5 " Slivce Value பிரதானமாக உள்ளது. இவை அனைத்தும் தேய்மானமாகி அடிக்கடி பழுது ஏற்படுகிறது. மேலும் இவ்வால்வுகள் சரி வர வேலை செய்யாததால் மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் ஏற்றம் செய்யப்படும் போது, நீர் கசிவு ஏற்பட்டு தண்ணீர் விநியோகத்திற்கு திறப்பதற்கு முன்னர் பகிர்மான குழாய்களில் சென்றடைகிறது. இதனால் OHT"யின் முழு கொள்ளளவுக்கு நீர் தேக்கம் செய்வது தடை படுகிறது. இதனால் தண்ணீர் திறக்கும் போது நீர் அழுத்தம் குறைந்து கடைப்பகுதி (Tail end) சென்றடைவதால் தடை ஏற்படுகிறது. எனவே "Slivce Value"களை மாற்றம் செய்யவும், அதற்கான தொட்டிகள் கட்டவும், மேற்கண்ட வேலைகளை செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2,30,000/– லட்சத்திற்கு குடிநீர் நிதியின் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். /2019/இ1

**தீர்மானம் எண்.906–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 41**

இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம், மனித ஆய்வு குழிகள் தற்போது நடைபெற்ற சாலை பணிகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலை (NH) விரிவாக்க பணிகளின் போது சேதமான மனித ஆய்வு குழி Frame–யுடன் கூடிய மூடிகள் சேதமடைந்துள்ளது. அவற்றை மாற்றம் செய்ய 40–எண்ணம் புதிய மூடியுடன் கூடிய Frame வாங்க ரூ.1,75,000/– லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். /2019/இ1

**தீர்மானம் எண்.907–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 42**

இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பில் நிறுவப்பட்டுள்ள "Air Valve"களியிலிருந்து வெளியேறும் கசிவு நீர் மற்றும் காற்று, குடியிருப்பு பகுதிகளுக்கு உட்புகுதா வண்ணம் தொட்டிகள் அமைத்து மாற்று ஏற்படாக குழாய்கள் அமைத்து மூடியிட தயார்

செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.50,000/–த்திற்கு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டடப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். /2019/இ1

**<u>தீர்மானம் எண்.908–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 43**

இராமநாதபுரம் நகராட்சியின் 2017–2018ம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கைகள் மற்றும் தணிக்கை குறிப்புகள் தட்டச்சு செய்து, நான்கு பிரதிகள் பைண்டிங் செய்த வகையில் உத்தேச செலவினம் ரூ.12,000/–த்திற்கு மன்றப் பொருள் அனுமதிக்கு வேண்டடப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.848/அ3/2018

**<u>தீர்மானம் எண்.909–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 44**

இராமநாதபுரம் நகராட்சியின் 2018–2019ம் ஆண்டிற்கு ஒப்பந்ததாரரிடமிருந்து பிடித்தம் செய்த GST தொகையினை உரிய தலைப்பில் செலுத்துவதற்கு (GST & Contractors TDS Return Filling Charges From) கணக்கீட்டு படிவம் தயார் செய்து கொடுத்தமைக்கு "Alayam Associates, Trichy" என்பவருக்கு பட்டியல் தொகை ரூ.11,500/– வழங்க மன்றத்தின் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.910–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 45**

இராமநாதபுரம் நகராட்சியின் 2018–2019ம் ஆண்டிற்கு ஒப்பந்ததாரர்களுக்கு பிடித்தம் செய்த Income Tax TDR Return Filling and non Salary 26 Q & 24Q Salary Uploading Charges மற்றும் TDC Certifcate Downloading Charges கணக்கீடு படிவம் தயார் செய்த வகைக்கு ரூ.15,050/– பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் விபரப்படி பட்டியல் தொகை ரூ.15,050/– வழங்க மன்றத்தின் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.911–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 46**

இராமநாதபுரம் நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் அர்ச்சனா ஹோட்டல் அருகில் உள்ள 18.9X9.5 என்ற அளவில் உள்ள அறை பொதுமக்கள் பயன்பாட்டில் இல்லாமல் பகலில் ஆக்கிரமிப்புகள் உள்ளது. அதே சமயத்தில் நோய்கள் பரப்பும் விகிதத்தில சுகாதாரமற்ற நிலையில் உள்ளது. மேலும் இரவு நேரங்களில் தேவையற்ற வகையில் பயன்படுத்துவதாக அறியப்பட்டது. எனவே பொது சுகாதாரம் மற்றும் நிர்வாக நலன் கருதி மேற்படி இடத்தில் உரிய விதிமுறைகளை பின்பற்றி ஒரு கடையினை நடத்துவதற்கு மன்றத்தின் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.912–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 47**

இராமநாதபுரம் நகரின் விரிவாக்கத்திற்கேற்பவும் வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கேற்ப பொது சுகாதாரப்பிரிவு துப்புரவு பணியாளர்களுக்கு அரசாணை (நிலை) எண்:101, நாள்:30.11.1997 – ன் படி 342 பணியாளர்கள் தேவையாக உள்ளது. தற்போது நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை 161 – ல் பணியில், 94 பணியாளர்கள் மட்டுமே உள்ளனர். 67 பணியிடங்கள் காலியாக உள்ளன. இதனை ஈடுகட்டும் வகையில் ஆட்கள் வெளி கொணர்வு முறையில் எடுத்துக் கொள்ள 83 பணியாளர்களுக்கு அனுமதித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் எண்:17987/பி3/2016 நாள்:27.07.2016 – ன் படி வரப்பெற்று பணியமார்த்தப்பட்டுள்ளது. தற்பொழுது மேற்காணும் அரசாணையின் படி தேவைப்படும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கைக் ஏற்ப தற்பொழுது பணியில் உள்ள பணியாளர்கள் போக மீதமுள்ள பணியாளர்கள் தேவைக்கு ஆட்கள் வெளி கொணர்வு முறையில் எடுத்துக்கொள்ள அனுமதித்து 170 பணியாளர்களுக்கு அனுமதி வழங்கி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது செயல்முறை கடிதம் K.Dis. எண்: 28369/J3/2018. நாள்:22.11.2018 – ன் படி உத்திரவிட்டுள்ளார்கள்.

கூடுதலாக அரசு ஆணைப்படி நகரின் தேவைக்கேற்ப தேவைப்படும் 342 பணியாளர்களில், பணியில் உள்ள நிரந்தர பணியாளர்கள் 94, ஆட்கள் வெளிக்கொணர்வு முறையில் 83, மற்றும் உரக்கிடங்கில் ஆட்கள் வெளிக்கொணர்வு முறையில் 20 பணியாளர்கள் போக மீதம் 145 பணியாளர்கள் தேவையாக உள்ளது. தற்பொழுது நகராட்சி நிதி நிலையை கருத்தில் கொண்டு 50 துப்புரவு பணியாளர்களை ஆட்கள் வெளிக்கொணர்வு முறையில் எடுத்து பயன்படுத்திக் கொள்ளவும் ஆகும் செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ 7,12.500 இலட்சம் வீதம் (உத்தேச

கணக்கீட்டின் படி) வருடம் ஒன்றுக்கு 85.50 இலட்சம் நிதி செலவினத்திற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. நகரின் மேம்பாடு கருதியும், பணியிடங்கள் பற்றாக்குறையை போக்கிடவும். MCC, OCC ஆகியவைகள் செயல்படுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவ்வப்போது நடைமுறையில் விதிகள் மற்றும் உயர் அலுவலர்களின் ஆணைகள் (Executive Direction) ஆகியவற்றினை பின்பற்றி தனியார் மூலம் துப்புரவு பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.913–</u>** மாவட்ட ஆட்சி தலைவர் நிர்ணயம் செய்யும் தொகை மற்றும் இதர (ESI, EPF, LIC Maintainance Charge, ETC) தொகைகள் சேர்த்து ஒரு நபர்க்கு எவ்வளவு வருகின்றதோ அதனை கணக்கீட்டு ஒரு வருடத்திற்கு தொகை நிர்ணயம் செய்யலாம். மேலும் அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 48**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்களுக்கு, அன்னார் பணி நேரத்தில் பணிபுரியும் பொழுது, அதற்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் ஒளிரும் ஜாக்கெட், கையுறை, தலைத்தொப்பி, மூக்கு உறை ஆகியவைகள் தற்பொழுது பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு கேற்ப 1 ஆண்டிற்கு பயன்படுத்த கூடிய அளவில் வாங்கி பயன்படுத்தி கொள்ளவும் அதற்கான உத்தேசன செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.914–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 49**

இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் நிதி திட்டம் 2019–20ன் கீழ் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் குடிநீர் விநியோக லாரி வாகனம் எண்.TN65–3820–க்கு தகுதி சான்று பெறுவதற்கு பழுதுநீக்கம் பணிமேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.26,000/–த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1786/2019/இ1

**<u>தீர்மானம் எண்.915–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 50**

இராமநாதபுரம் நகராட்சி, உள்ளாட்சி தேர்தல்–2019, நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் 2019–ல் நடைபெறவுள்ளதால் தேர்தல் பணிக்கான கோப்புகள், பதிவேடுகள் படிவம் முதலியவை பராமரிக்கப்பட்டு வருவதற்கு இ–1 எழுத்தர் பிரிவிற்கு 2 பீரோ (6 ½ அடி) வாங்கி பயன்படுத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.23,000/–த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – 1)மன்றம் அனுமதிக்கலாம்

2)தேர்தல் பணி என்பதினால் நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோர அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1813/2019/இ1

**<u>தீர்மானம் எண்.916–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் 51</u>**

இராமநாதபுரம் நகராட்சி, தூய்மை இந்தியா திட்டம் 2018–19ன் கீழ் முதல் நிலை திடக்கழிவு சேகரப் பணிக்காக பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் (Battery Operated Vehicle) BOV 25–எண்ணம் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.45.00/–லட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது செயல்முறை கடிதம் எண்.38984/பி1/2014, நாள். 11.01.2019–ன்படி 8th SHPC கூட்டமர்வில் அனுமதி ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது செயல்முறை கடிதம் எண்.1191/பி3/2019, நாள். 21.01.2019–ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி இரு உரைமுறையில் (Two Cover System) 14.02.2019–ந் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 4 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி வரப்பெற்ற 4 ஒப்பந்தப்புள்ளியில் இப்பணியை மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்தக்குழுவால் (Tender Committee) கூராய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே, தொழில் நுட்ப நிபந்தனைகளை Technical Creteria) நிறைவு செய்துள்ளதால் தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளியாக முடிவு செய்து அதற்குரிய Price Bid-யினை 11.03.2019

அன்று திறக்க தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் விலைப்பட்டியல் ஒப்பு நோக்கியதில் கீழ்க்கண்டவாறாக விலை விகிதங்கள் வழங்கியுள்ளார்கள்.

| வ.எண் | ஒப்பந்ததாரர்களின் பெயர்கள் | மதிப்பீடு லட்சத்தில் (ரூ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) | வழங்கியுள்ள விலை விகிதம் கூடுதல்/குறைவு ரூ. |
|---|---|---|---|---|
| 1 | M/s.Eshwar Motors, Shed No-9 Industrial Estate, Telichathanallur-Post, Paramakudi-623 707 | **45,00,000/–** | **44,72,500/–** | **0.61%** சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s.Greenetics Industries Private Limited, Plat No-D-4, Sidco Industrial Estate, Kappalur, Madurai-625 008 | **45,00,000/–** | **44,75,000/–** | **0.55%** சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களில் குறைந்த விலைவிகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.Eshwar Motors,Shed No-9, Industrial Estate, Telichathanallur-Post, Paramakudi-623 707, அவர்களது **0.61%** சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தத்தினை ஏற்க மன்றத்தின் பரிசீலனைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

**2)**நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று விநியோகம் செய்ய வேலை உத்திரவு வழங்குவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்.138/2019/இ1.

**தீர்மானம் எண்.917–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 52**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு, பொது சுகாதார பணிக்கு தேவைக்கான கிருமி நாசினிகளான நீர்த்த சுண்ணாம்பு தூள், பிளிச்சிங் பவுடர் மற்றும் பினாயில் ஆகியவைகள் **2019–2020** ஆண்டிற்கு தேவைக்கேற்ப வாங்கி பயன்படுத்தி கொள்ளவும், அதற்கான

செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் உத்தேச செலவீனம் ரூ.8.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**–பொது சுகாதார பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.918–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 53**

இராமநாதபுரம் நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கான மூன்றாண்டு தொகுப்பு 30.06.2019–ல் முடிவடைவதின் பேரில் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை குத்தகை தொகை 15% (பதினைந்து) சதவீதம் உயர்த்திக் கொள்ள (01.07.2019 முதல் 30.06.2022 வரையில்)அரசாணை (நிலை) எண்.92 நாள்.03.07.2007–ன்படி உயர்வு செய்ததை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.919** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 54**

இராமநாதபுரம் நகராட்சி, தெருவிளக்கு பராமரிப்பு தனியார் நிறுவனம் மூலம் பணிமேற்கொள்ளப்பட்டு 31.05.2019 அன்றுவுடன் ஒப்பந்தம் முடிவடைந்து உள்ளது. மேற்படி தெருவிளக்கு பராமரிப்பு அளவுகோலின்படி (Standard) 600 மின் விளக்கிற்கு 1–மின்கம்பியாளர், 1–மின்கம்பி உதவியாளர் என்ற அளவின்படி மொத்தம் 3 மின்கம்பி உதவியாளர் மற்றும், 3–மின்கம்பி உதவியாளர்கள் தேவைப்படுகின்றது. ஆனால் தற்போது இந்நகராட்சியில் மின்கம்பியாளர்–2'' எண்ணம் மற்றும் மின் கம்பி உதவியாளர் 3'' எண்ணம் பணியிடம் உள்ளது. மேலும் இதில் 2 ''மின்கம்பியாளர்கள் ஒருவர் பணி மூப்பு காரணமாக ஓய்வு பெற்றுவிட்டார். மேலும் ஒருவர் நீண்ட காலமாக விடுப்பில் உள்ளதாலும் இப்பணியிடம் காலியிடமாக இருந்து வருகிறது.

இந்நிலையில் மின்கம்பி உதவியாளர்கள் 3'' நபர் மட்டுமே இருக்கும் காரணத்தால் தெருவிளக்கு பராமரிப்பு பணி தொய்வு ஏற்படாமல் இருக்க கூடுதலாக இப்பணிக்கு 3'' நபர் மின்கம்பி உதவியாளர்கள் வெளிபணியாளர்கள் கொண்டு பணிமேற்கொள்ள ''பொதுப்பணித்துறை, தரவிலை விகித அளவின்படி 2019–2020''ஆம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/– லட்சத்திற்கு நகர் மன்ற நிர்வாக அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2092/2019/இ1

**<u>தீர்மானம் எண்.920–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் மற்றும்  ஆணையாளர்
இராமநாதபுரம் நகராட்சி